செ.வெ.எண்: 418 நாள்: 05.07.2019

# தேசிய தொழிற் சான்றிதழ்கள் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களின் சான்றிதழ்கள் இணையதளத்தில் சரிபார்த்து கொள்ளலாம்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தேசிய தொழிற் சான்றிதழ்கள் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களின் சான்றிதழ்கள் இணையதளத்தில் சரிபார்த்து கொள்ளலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்த்துறையின் கீழ் செயல்படும் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ்கள் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்களும், டி.ஜி.டி புதுதில்லியால் வழங்கப்படுகிறது.

தேசிய தொழிற் சான்றிதழ்கள், தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்கள், தொழிற் பள்ளி சான்றிதழ் பெற்ற முன்னாள் பயிற்சியாளர்கள் பணியில் அமர்த்தப்படும் நேர்வில் அவர்களது சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை சரிபார்க்க தபால்கள் மூலமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு சான்றிதழ்கள் தபால்கள் மூலமாகவே அனுப்பபட்டு வந்தது.

இத்துறையால் தேர்வு நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் வழங்கிய ஆவணங்கள் கணினிமயமாக்கப்படாமல் இருந்ததால் சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்ப்பு பணிகள் உரிய ஆவணங்களுடன் ஒப்பு நோக்கி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனை எளிமையாகவும், விரைவாகவும் வழங்கும் பொருட்டு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.திருமதி.நிலோபர்கபில் அவர்களால் இணையதளம் மூலம் சான்றிதழ் சரிபார்க்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் தொழிற் பழகுநர் திட்டத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தும் போது அவர்களது சான்றிதழ்களின் (தேசிய தொழிற் சான்றிதழ், தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ், தொழிற் பள்ளி சான்றிதழ்) உண்மைத் தன்மை சரிபார்ப்பு தேவை ஏற்படும்போது இணையதள முகவரி www.skilltraining.tn.gov.in- யைப் பயன்படுத்தி சான்றிதழ் உண்மைத் தன்மையை சரிபார்த்துக்கொள்ளுமாறு அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**